புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • அக்டோபர் 05, 2023 • புரட்சி 23 • முழக்கம் 38 • விலை ரூ.3.00

# திண்டுக்கல் கழகம் எழுச்சி இடைவிடாத பரப்புரைகள்

**திண்டுக்கல் :** ஒட்டன்சத்திரம் தாலுகாவிற்குட்ப்பட்ட மூலச்சத்திரம், ஸ்ரீ ராமபுரம், கன்னிவாடி, தருமத்துப்பட்டி, பாரைப்பட்டி, செம்பட்டி, ஆத்தூர் ஆகிய இடங்களில் 24.09.2023 முதல் 25.09.2023 வரையிலும்,

நிலக்கோட்டை தாலுகாவிற்குள் அய்யம் பாளையம், பட்டிவீரன்பட்டி, வத்தலகுண்டு காளியம்மன் கோவில் அருகில். வத்தலகுண்டு காவல் நிலையம் அருகில், விராலிபட்டியிலும், விருவீட்டிலும், அணைப்பட்டி, நில க்கோட்டை, சிலுக்குவார்பட்டி, பள்ளபட்டி, கொடைரோட்டு ஆகிய இடங்களில் 26.09.2023 முதல் 27.09.2023 வரையிலும்,

திண்டுக்கல் வட்டத்தில் சின்னாள பட்டி பொன்னஞ் செட்டியார் வீதி, சின்னாளபட்டி பூஞ்சோலை வீதி, நி.பஞ்சம்பட்டி வீதி உள்ளிட்ட இடங்களில் 28.09.2023 முதல் 29.09.2023 வரை தெருமுனைக் கூட்டங்கள் பொது மக்களின் பேராதரவுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

ஒவ்வொரு கூட்டமும் பெரியார் - ராஜா - மாக்சிம் கார்க்கி குழுவின் பாடல்களுடன் தொடங்கியது. மாவட்ட இணையதளப் பொறுப்பாளர் ராஜா வரவேற்புரையாற்றினார்.

தேனி ராயன், மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி சிறப்புரையாற்றினர். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாக்சிம் கார்க்கி நன்றியுரையாற்றினார்.

பொதுமக்களும் பெண்களும் ஆர்வமாக நிகழ்ச்சியை கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

### தர்மபுரியில் தொடர் கூட்டங்கள்

**தர்மபுரி :** தர்மபுரி மாவட்டக் கழகம் சார்பில் பென்னாகரம் மற்றும் கூத்தப்பாடி பகுதிகளில் முதற்கட்ட தெருமுனைக் கூட்டங்கள் முடிவடைந்த நிலையில் இரண்டாம் கட்டமாக 10.09.2023 அன்று ஏரியூர், ஒகேனக்கல், பி.அக்ரஹாரம் மற்றும் கடமடை ஆகிய பகுதிகளிலும், 11.09.2023 அன்று பாலக்கோடு, வெள்ளி சந்தை, மாரண்டஹள்ளி, பாப்பாரப்பட்டி பேருந்து நிலையம், பாப்பாரப்பட்டி அரசு கலைக் கல்லூரி, சோம்பட்டி பேருந்து நிறுத்தம் மற்றும் பண்டள்ளி கிராமம் உள்ளிட்ட இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் வேணுகோபால் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சந்தோஷ் குமார் முன்னிலை வகித்தார்.

சந்தோஷ் குமார் - அருண்குமார் குழுவின் அரசியல் நையாண்டி நிகழ்ச்சியுடன் கூட்டம் தொடங்கியது.

தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் திருப்பூர் மகிழவன் சிறப்புரையாற்றினார்.


23.09.2023 அன்று நல்லம்பள்ளி பேருந்து நிறுத்தம் கூட்டம் தொடங்கியது. அதைத் தொடர்ந்து தர்மபுரி நகரப் பேருந்து நிலையம், சோகத்தூர் கூட்டு ரோடு, இண்டூரில் கூட்டம் மக்கள் ஆதரவுடன் நடைபபெற்றது.

கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈஸ்வரன், கிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர் பரமசிவம், செல்வமணி, அருண்குமார், அசோக்குமார், ராமதாஸ், நஞ்சப்பன், தேவன், மு.மாதையன், சுதந்திரகுமார், தேசிய குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## நெமிலியில் பெரியார் பிறந்தநாள் பொதுக்கூட்டம்




தொடர்ச்சி 2ஆம் பக்கம்



# காந்தியாரின் ‘பிராமண’ எதிர்ப்பு

1915 இல் காந்திஜி சென்னை வந்தார், இதே பயணத்தின் போது தரங்கம்பாடியில் பஞ்சமர்கள் சார்பில் காந்திஜிக்கு வரவேற்பு பத்திரம் படித்தளிக்கப்பட்டது. அதில் தங்களுக்கு குடிநீர் வசதியோ, பிற வசதிகளோ கிட்டவில்லை என்றும், நிலத்தை வாங்கவோ, விற்கவோ தங்களால் முடியவில்லை என்றும், தங்கள் குறைகளை தீர்த்துக் கொள்ள நீதிமன்றங்களையும் அனுக முடியவில்லை என்றும் அவர்கள் முறையிட்டிருந்தனர். இது அவரைப் பெரிதும் நெகிழ வைத்தது. இதுபற்றி மாயவரம் (மயிலாடுதுறை) கூட்டத்தில் அவர் வேதனையோடு உரைத்தார்.

“வெளிநாடுகளில் இருந்து கொண்டு நான் இந்துமதத்தைப் பற்றி அறிந்தவரை தாழ்த்தப்பட்டோர் முதுகில் ஏறி உட்காருவது இந்துமதமல்ல என்றே தெரிந்தது. இதுதான் இந்துமதம் என்று என்னிடம் மெய்ப்பிக்கப் பெற்றால், நான் அதன் பகிரங்க விரோதியாவேன். தீண்டத்தகாதவர்கள் என ஒரு வகுப்பார் உருவாக காரணமாக இருந்தவர்கள் யார்? **எங்கெங்கே பிராமணர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் உயர்ந்தவர்கள் என்ற மரியாதையை அவர்களே பெறுவதாக நான் அறிகிறேன். அவர்கள் தான் உயர்ந்தவர்கள் என்ற அருகதையை பெறுபவர்கள் என்றால், இந்தப் பாவம் அவர்களையே சாரும்.**

பகவத்கீதைசொல்வதைநினைவில்கொள்ளுங்கள்,.பண்டிதனுக்கும் பாமரனுக்கும் எவன் வேறுபாடு பாராட்டுவதில்லையோ அவனே உண்மையான பிராமணன் என்று கீதை கூறுகிறது. மாயவரத்தில் உள்ள பிராமணர்கள் தங்களையும் பறையர்களையும் சம நோக்குடன் பார்க்கிறர்களா? பிராமணர்கள் பஞ்சம சகோதர்களிடம் சமமாக பழகினால் மற்ற வகுப்பினர் அவர்களைப் பின்பற்றமாட்டேன் என்று சொல்வார்களா?

இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர், வரவேற்பு வாசித்தளித்தவர் எல்லாம் பிராமணர்களே, அவர்கள் மத்தியில் அவர்களது மனசாட்சியை தட்டியெழுப்பும் வகையில் பேசக்கூடிய கொள்கை துணிச்சல் அவருக்கு இருந்தது. அதுமட்டுமல்ல, 1915லேயே பஞ்சமர் பிரச்சனையில் அவர் கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டார் என்பதும் இந்த அழுத்தமான பேச்சிலிருந்து தெளிவாகிறது. அந்த காலத்தில் வைதீகக் கோட்டையாக இருந்த மாயவரத்தில் காந்திஜி இப்படி பேசியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

காந்திஜியைப்பொருத்தவரை,பிறருக்குதான்எதைபோதிக்கிறாரோ அதைத்தானும் கறாராக பின்பற்றுவார். தென்னாப்பிரிக்காவில் தன்னோடு இருந்தவரும் ஐரோப்பிய தோட்ட அதிபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டவருமான செல்வன் என்பவரின் துணைவியாரைத் தரங்கம்பாடியில் சந்தித்தார் காந்திஜி. அவருடைய

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

தலையங்கம்

## வாச்சாத்தி தீர்ப்பை வரவேற்கிறோம்

1992 ஜூன் மாதம் 20ஆம் தேதி தர்மபுரி மாவட்ட மலைக் கிராமமான வாச்சாத்தி பழங்குடி மக்கள் மீது அந்தக் கொடூரமான தாக்குதல் நடந்தது. சந்தன மரங்களை வெட்டி சட்டவிரோதமாகக் கடத்துகிறார்கள் என்று சந்தேகித்து வனத்துறை – வருவாய்த்துறை – காவல்துறையினர் 269 பேர் சூழ்ந்து கொண்டு, 655 மக்கள் வசிக்கும் அந்த கிராமத்தை சூறையாடினர். குழந்தைகள், பெண்களை கொடூரமாக தாக்கியதோடு, நீர்நிலைகளில் விஷம் கலந்தனர். 18 பெண்கள் பாலுறவு வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர். அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதாவுக்கு தெரிந்தே இவ்வளவு கொடுமைகளும் நடந்தன. இந்த அதிகாரிகள் மீது வழக்குப்பதிவு செய்யக்கூட ஜெயலலிதா ஆட்சி தயாராக இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் சி.பி.அய் விசாரணைக் கோரி உயர்நீதிமன்றம் சென்றார்கள். சமூக இயக்கங்கள், தொண்டு நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டின, நான்கு ஆண்டுகள் கடந்து, 1996இல் சி.பி.அய் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது. தொடர்ந்து தர்மபுரி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் 15 ஆண்டுகள் வழக்குகள் இழுத்தடிக்கப்பட்டன. நீதிமன்றம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக 2011இல் தீர்ப்பு வழங்கியது.

பாலுறவு வன்முறை, தீண்டாமை ஒழிப்புச் சட்டங்களின் கீழ் அனைவரும் குற்றவாளிகள் என்று நீதிமன்றம் உறுதி செய்தது. தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த அதிகாரிகள் தீர்ப்புக்கு தடை வாங்கினர். தொடர்ந்து வந்த ஆட்சிகள் குற்றவாளிகளைக் காப்பாற்றவே முயன்றன என்பது கசப்பான உண்மை. உயர்நீதிமன்றம் கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்ததோடு அதிமுக ஆட்சியையும் கடுமையாகக் கண்டித்தது.

30 ஆண்டுகளுக்கு பிறகு தீர்ப்பு வழங்கிய சென்னை உயர்நீதிமன்றம் குற்றவாளிகளின் குற்றத்தை உறுதிப்படுத்தி தீர்ப்பு வழங்கியிருப்பது பாராட்டி வரவேற்கத்தக்கதாகும். நீதிபதி வேல்முருகன் வாச்சாத்திக்கே நேரில் சென்று மக்களிடம் உண்மையை கேட்டறிந்தார். இப்போது பிணையில் உள்ள அனைத்து குற்றவாளிகளையும் உடனடியாக சிறையில் அடைக்க உத்தரவிட்டுள்ளார். குற்றம்சாட்டப்பட்ட 265 பேரில் இறந்தவர்கள் போக உயிருடன் இருப்பவர்கள் 215 பேர், 2011இல் தீர்ப்பளித்த தர்மபுரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் உயிருடனிருந்த 215 பேரில் 12 பேருக்கு 10 ஆண்டுகள், 5 பேருக்கு 7 ஆண்டு சிறை, மற்றவர்களுக்கு 1-3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதித்ததை நீதிபதி வேல்முருகன் உறுதிப்படுத்தியுள்ளார்.

பாலுறவு வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்களுக்கான இழப்பீட்டுத் தொகையை 10 இலட்சமாக உயர்த்தி வழங்கியதோடு, அதில் 5 இலட்சத்தை குற்றவாளிகளிடமிருந்து பெற வேண்டும் என்றும், பாதிக்கப்பட்டோருக்கு அரசு வேலை அல்லது சுய தொழில்களுக்கான ஏற்பாடுகளை அரசு வழங்கிட வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உரிய நடவடிக்கை எடுக்காத மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வன அதிகாரி உள்ளிட்டோர் மீதான புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கிரிமினல் நீதித்துறையின் மீது நம்பிக்கையூட்டும் தீர்ப்பு என்பதோடு வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் வலிமையையும் இத்தீர்ப்பு உணர்த்துகிறது. நீதி வென்றுள்ளது. தீர்ப்பை பாராட்டி வரவேற்கிறோம்.

## “கொசுத் தொல்லை தாங்க முடியல, நாராயணா!”

*நாராயணா இந்த கொசுத் தொல்லை தாங்க முடியலப்பா.... என்று கவுண்டமணி ஒரு படத்தில் கூறுவதுதான் ஆளுநரின் பேச்சைக் கேட்கும்போது நமக்கு நினைவுக்கு வருகிறது. மீண்டும் சனாதனம் பற்றி அவர் வாய் திறந்து இருக்கிறார். சனாதனத்தின் அடிப்படை வேதத்தில் இருக்கிறது என்று அவர் கூறியுள்ளதோடு சனாதனத்திற்கு அடிப்படை வேதம் தான் என்றும் அவர் கூறியிருக்கிறார்.*

*ஒரு கேள்வி, சனாதனத்தின் கருத்து வேதத்தில் இருக்கிறது என்பதற்கு வேதத்தில் ஏதாவது சான்றுகள் இருக்கிறதா? வேதத்தின் எந்த கருத்து சனாதனத்தில் இடம்பெற்றிருக்கிறது என்பதை ஆளுநரால் கூறமுடியுமா? வேதத்தில் சனாதனம் என்ற ஒரு சொல் கூட கிடையாது என்பது ஆளுநருக்குத் தெரியுமா? இதற்கெல்லாம் அவரிடம் பதில் இல்லை. நமது பாரதம் ஏதோ ஒரு ராஜாக்களால் உருவாக்கப்பட்டது இல்லை, அது சனாதன தர்மத்தாலேயே உருவாக்கப்பட்டது என்று அவிழ்த்துவிடுகிறார். ஒரு தர்மமே ஒரு தேசத்தை உருவாக்கி விட்டதாம், அதை நாம் நம்ப வேண்டுமாம். காதில் பூ சுத்திக்கொண்டு இருக்கிறார்.*

*நம்முடைய ரிஷிகளும், முனிவர்களும் சனாதனத்திற்கு அளப்பறிய பங்களிப்பை வழங்கியிருக்கிறார்கள் என்றும் அவர் பேசியிருக்கிறார். யார் இந்த முனிவர்கள், யார் இந்த ரிஷிகள், வெறும் கற்பகைக் கதாப்பாத்தரங்கள். இவர்கள் வரலாற்றுப் பாத்திரங்கள் அல்ல. கற்பனைகளால் கூறப்பட்ட கதாப்பாத்திரங்களை வரலாற்று நாயகர்களாக மாற்றுவது ஆளுநரின் வேலையா? அப்படியானால், இந்தியாவிற்கு ராஜா என்று ஒருவர் இல்லை என்று கூறுவது உண்மையானால் இந்த பாரதத்திற்கு 'பாரத்' என்று இவர்கள் ஏன் பெயர் சூட்டுகிறார்கள்?*

*பரதன் என்ற மன்னன் ஆட்சி காலத்தில்தான் பாரத தேசம் முழுவதும் ஒன்றாக இருந்தது எனவே இது பாரததேசம் என்று கூறிவந்தவர்கள் இப்போது மன்னர்களே இந்த நாட்டை உருவாக்கவில்லை என்று கூறுவதில் இருந்து இவர்கள் இதுவரை கூறியது எல்லாம் கற்பனையா? கட்டுக்கதையா? இதற்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும்.*

*தமிழ்நாட்டில் சனாதனம் பற்றி ஒரு இலட்சம் கல்வெட்டுகள் இருக்கிறது என்று கூறுகிறார் ஆளுநர். இந்த ஒரு இலட்சம் கல்வெட்டுகள் இருக்கிறதா? இல்லையா? என்பது கல்வெட்டு ஆய்வாளர்களுக்கே புரியாத விஷயம். இருந்தாலும் தமிழ்நாட்டில் இருக்கிற பல கல்வெட்டுகள் பல மன்னர்கள் பார்ப்பனர்களுக்கு சதுர்வேத மங்களங்களையும் நிலங்களையும் வழங்கியதையும், வரி விதிப்பில் இருந்து சலுகைகள் வழங்கியதையும் தான் குறிக்கிறது. ஆக, பார்பனர்களுக்கு கொட்டி அழுததைத் தான் இந்த கல்வெட்டுகள் கூறுகிறது. இவைகள் எல்லாம் சனாதன கல்வெட்டுகள் என்று கூறியதன் மூலம் பார்ப்பனியம் தான் சனாதனம் என்பதை முழுமையாக ஆளுநர் ஒத்துக்கொள்கிறாரா?*

*இன்னொரு கதையையும் அவர் அவிழ்த்துவிட்டு இருக்கிறார். ஜி20 மாநாடு என்பது சனாதன மாநாடுதான். டெல்லியில் இரண்டு நாட்கள் ஜி20 மாநாடு கூடி சனாதனத்தைப் பற்றி பேசியிருக்கின்றன என்று கூறியிருக்கிறார். ஜி20 மாநாடு வெளியிட்ட பிரகடனத்தில் சனாதனம் என்ற ஒரு வார்த்தைக் கூட இடம்பெறவில்லை. ஆனால் அவைகள் சனாதனத்தைப் பேசுவதாக ஆளுநர் கூறுகிறார். சனாதனத்தை ஒழிக்கவே முடியாது என்றும் அவர் கூறுகிறார். ஒழிக்கவே முடியாத சனாதனத்திற்காக ஆளுநர் மாளிகையில் இருந்து ஏன் இவர் இப்படி கதறிக்கொண்டு இருக்க வேண்டும்? பதற வேண்டும். உதயநிதி ஸ்டாலின் மீது ஏன் இப்படி வழக்குகளை போட வேண்டும், அவர் தலைக்கு விலை வைக்க வேண்டும். இவர்கள் சுற்றி வளைத்து பேசுவதெல்லாம் என்னவென்றால், இது பார்ப்பனிய நாடு, பார்ப்பனியத்திற்கு ஆதியும் கிடையாது, அந்தமும் கிடையாது, காலம் காலமாக பார்ப்பனியர்கள் தேசமாகவே இருந்து கொண்டு இருக்கிறது எனவே இரு எங்கள் நாடு என்று உரிமைக் கொண்டாடவே சனாதனம் என்ற போர்வைக்குள் இவர்கள் பதுங்கிக் கொண்டு கதைவிட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.*

*இரா*

1ஆம் பக்கம் தொடர்ச்சி

*நெமிலி : தந்தை பெரியார் பிறந்தநாள் விழா, சனாதன எதிர்ப்புப் பொதுக்கூட்டம் மற்றும் மரக்கன்று நடும் விழா! 30.09.2023 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நெமிலி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது.*

*ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத் தலைவர் திலீபன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் இரா.சிவா கூட்டத்தை தொகுத்து வழங்கினார். பொதுக்கூட்டம் மனிதம் கலைக் களம் குழுவின் இசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது.*

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழக மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் பொழிலன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திருமூர்த்தி உள்ளிட்ட தோழர்கள் சிறப்புரையாற்றினர்.*

*பார்த்திபன் நன்றி கூறினார்.*

*கூட்டத்தில் சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் ரவிபாரதி, வேலூர் மாவட்ட பொருப்பாளர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

### அண்ணாமலை உளறல்!

- திமுக பொய் பேசுவதற்கு சமூக வலைதளங்களை பயன்படுத்துகிறது - அண்ணாமலை

  **இதுவே ஆகாசப் பொய்!**
  **அண்ணா முத்துராமலிங்க தேவரிடம் மன்னிப்பு கேட்டார் போன்ற “உண்மை”களை உங்களால் தான் பேச முடியும்.**

- கட்சித் தலைமை கூட்டணி முறிவு குறித்து என்னிடம் அறிக்கை கேட்கவில்லை - அண்ணாமலை

  **ஏற்கனவே நிர்மலாவிடம் அறிக்கை கேட்டு வாங்கிவிட்டார்கள் என்பது கூட உங்களுக்கு தெரியாதா?**

- எனக்கு என தனி உலகம் இருக்கிறது, அதில் வாழ்கிறேன் - அண்ணாமலை

  **நூற்றுக்கு நூறு சரியான உண்மை!**

- மாநிலத் தலைவர் பதவி என்பது எனக்கு வெங்காயம் - அண்ணாமலை

  **எப்படி எல்லாம் வெங்காயத்தை அவமதிக்காதீர்கள்.**

- பழைய பஞ்சாங்க அரசியலுக்கு எல்லாம் இப்போது இளைஞர்கள் தயாராக இல்லை - அண்ணாமலை

  **பஞ்சாங்கம் பொய்; அது காலாவதியாகிவிட்டது என்பதை ஒப்புக்கொண்டதற்கு மகிழ்ச்சி**

# பெரியாருக்கு எதிரான அடுக்கடுக்கான திரிபுகள்

# தொண்டு வீராசாமி ஏன் விலகினார்?

அம்பேத்கர் பிறந்தநாள் கொண்டாடியதற்காக பெரியார் இயக்கத்தின் முன்னணித் தலைவராக இருந்த தொண்டு வீராசாமியை – பெரியார் கட்சியில் இருந்து நீக்கினார் என்று பொய்யுரைக்கும் ரவிக்குமார், ஸ்டாலின் ராஜாங்கத்துக்கு ஆதாரங்களுடன் மறுப்பு.

ரவிக்குமாரை ஆசிரியராகக் கொண்டு நெய்வேலியில் இருந்து வெளி வந்த 'தலித்' எனும் ஏட்டின் முதல் இதழில் (1997) இளையபெருமாள் அவர்கள் சொன்னதாக வந்திருந்த ஒரு செய்தி குறித்து தோழர் எஸ்.வி. ராஜதுரை அவர்கள் எழுதி, விடியல் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட 'பெரியார்: ஆகஸ்ட் 15' என்ற நூலில் (1998) 21வது அத்தியாயமாக 'பெரியாரும் அம்பேத்கரும்' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த கட்டுரையின் அடிக்குறிப்பாக எழுதப்பட்டுள்ள ஒரு செய்தி:

"பின்னாளில் 'தொண்டு' என்ற பத்திரிக்கையை நடத்தி வந்த வீராசாமியைப் பெரியார் 1952இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் திருச்சி (மாயவரம் இரட்டை உறுப்பினர் தொகுதி என்பதே சரி) ரிசர்வு தொகுதியிலிருந்து வெற்றி பெறச் செய்ததுடன் பெரியார் 1952இல் உருவாக்கிய அறக்கட்டளை உறுப்பினராகவும் ஆக்கினார். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் காரணமாக பெரியாரிடமிருந்து பிரிந்த 'தொண்டு' வீராசாமியை அம்பேத்கரின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடியதற்காக கழகத்திலிருந்து பெரியார் வெளியேற்றினார் என்ற அபத்தமான அருவருக்கத்தக்க குற்றச்சாட்டை பொறுப்புணர்வு மிக்க தலித் தலைவர் இளைய பெருமாள் கூறியுள்ளது (தலித் எண்:1. நெய்வேலி 1997) வருந்தத்தக்கது - எஸ்.வி.ஆர்" என்பதே அவ்வடிக்குறிப்பு.

ஆனால் 'எழுதாக் கிளவி: வரலாற்று அனுபவங்கள்' என்ற நூலில் ஸ்டாலின் ராஜாங்கம் "வீராசாமி பெரியாரிடமிருந்து ஏன் விலகினார் என்பதைத் துல்லியமாக அறிய முடியவில்லை. ஆனால் எஸ்.வி. ராஜதுரை எழுதிய 'பெரியார்: ஆகஸ்ட் 15' (1998) என்ற நூலில் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு காரணமாகவே வீராசாமி பிரிந்தார் என்று எழுதிய அவர் அவை எவை என்று கூறாமலேயே முடிக்கிறார். அம்பேத்கர் பிறந்த நாளைக் கொண்டாடியதற்காக பெரியார் வெளியேற்றினார் என்று எல். இளையபெருமாள் கூறிய கருத்தொன்றை அதே இடத்தில் எடுத்துக்காட்டும் எஸ்.வி.ஆர் "அபத்தமானது; அருவருக்கத்தக்க குற்றச்சாட்டு" என்று கூறுவதோடு மட்டும் முடித்துக் கொள்கிறார்.

இளையபெருமாளின் கூற்று மேற்கொண்டு ஆராயத் தக்கவையாக இருக்கலாம். ஆனால், அவரின் கூற்றை அபத்தமானது என்று கூற எந்த ஆதாரத்தையும் எஸ்.வி.ஆர் கூறவில்லை என்பதுதான் விந்தை. எல்.இளையபெருமாளின் குற்றச்சாட்டு பெரியார் மீது விமர்சனம் வைக்கிறது. எனவே, அதைப் பற்றி கூற வேண்டுமானால் எஸ்.வி.ஆர் அதை மறுப்பதற்கான ஆதாரம் இருக்க வேண்டும். எஸ்.வி.ஆர் ஆதாரம் தரவில்லை. ஆதாரமில்லாவிட்டாலும் அதை மறுக்க வேண்டுமென்ற 'அறிவுஜீவித் தன்முனைப்பு' என்பதைத் தவிர வேறெந்த 'நியாயமும்' எஸ்.வி.ஆரிடம் இல்லை' - [எழுதாக் கிளவி: (Kindle Edition வழிமறிக்கும் வரலாற்று அனுபவங்கள் பக் : 149.150) ]

"அம்பேத்கர் பிறந்தநாளைக் கொண்டாடியதற்காக (தொண்டு வீராசாமி) கழகத்திலிருந்து பெரியார் வெளியேற்றினார்" என்று கூறும் "இளைய பெருமாளின் கூற்று மேற்கொண்டு ஆராயத்தக்கவையாக இருக்கலாம்" என்று அது ஒரு அற்ப குற்றச்சாட்டு தானே என்று எளிதாகக் கடந்து செல்லும் ஸ்டாலின் ராஜாங்கம், அதை மறுப்பதற்கான ஆதாரம் தராதது அறிவுஜீவித் தன்முனைப்பு என்பதைத் தவிர வேறெந்த 'நியாயமும்' எஸ்.வி.ஆரிடம் இல்லை" என்று 'நாட்டாமை' தீர்ப்பை வழங்கியுள்ளார்.

ஒரு செய்தி குறித்து விமர்சனம் செய்யும் போது "அம்பேத்கர் பிறந்த நாளைக் கொண்டாடியதற்காக (வ.வீராசாமியை) கழகத்திலிருந்து பெரியார் வெளியேற்றினார்" என்பது எந்த ஆண்டில், எங்கு அம்பேத்கர் விழா கொண்டாடியதற்காக என்பவற்றையாவது கூறியிருக்க வேண்டும்!

## கொளத்தூர் மணி

அது குறித்து ஏதேனும் உரையாடல், விசாரணை நடந்ததா? அல்லது அம்பேத்கர் விழா கொண்டாடியதைக் கேள்விப்பட்டவுடன் வெளியேற்றப்பட்டு விட்டாரா? என்ற விளக்கமும்



இன்றி கூறிய குற்றச்சாட்டை விமர்சித்த எஸ்.வி.ஆர் குறித்து "எல். இளையபெருமாளின் குற்றச்சாட்டு பெரியார் மீது விமர்சனம் வைக்கிறது. எனவே, அதைப் பற்றி கூற வேண்டுமானால் அதை மறுப்பதற்கான ஆதாரம் இருக்க வேண்டும். எஸ்.வி.ஆர் ஆதாரம் தரவில்லை" என்ற குற்றச்சாட்டை எஸ்.வி.ஆர் மீது வைப்பதோடு 'அறிவுஜீவித் தன்முனைப்பு' என்ற தீர்ப்பை மட்டும் கொடுத்திருக்கிறார்.

'தலித்' இதழின் நேர்காணலில் "அம்பேத்கர் விழா நடத்தியதற்காக தொண்டு வீராசாமி பெரியார் கட்சியை விட்டு நீக்கினார்" என்று கூறியதுதான் விவாதத்தின் மையப் பொருள் ஆகி உள்ளது.

அந்த அடிக்குறிப்பிலேயே 'தொண்டு' வீராசாமி 1952ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மாயவரத்தில் (இன்றைய மயிலாடுதுறை) தனி வேட்பாளராக போட்டியிடச் செய்ததோடு (சுயேட்சை) பெரியாரின், திராவிடர் கழகத்தின் தீவிர பரப்புரையாலும் வெற்றி பெறவும் வைத்தனர் என்பதையும் கூறுகிறது..

அத்தேர்தலில் வீராசாமி அவர்களை உறுதியளித்தபடி ஆதரிக்கவில்லை என்பதை கம்யூனிஸ்ட் கட்சியுடன் முரண்படச் செய்யும் அளவுக்கு பெரியாருக்கு 'தொண்டு' வீராசாமி மீதான ஒரு அக்கறை இருந்திருக்கிறது.

12.4.1953 அன்று மதுரையில் நடைபெற்ற தென்பகுதி ரயில்வே மென் யூனியன் கிளையின் கூட்டத்தில் (திராவிடர் கழகத்தின் துணை அமைப்பு) மத்திய சங்கத் தலைவர் எஸ். இராகவானந்தம் (பின்னர் அஇஅதிமுக அமைச்சராகவும் இருந்தார்) ஆற்றிய உரை 23.4.1953, 26.4.1953 ஆகிய நாளிட்ட 'விடுதலை' ஏடுகளில் வெளிவந்துள்ளது. 1952 தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியினருடன் கொண்டிருந்த உறவும், நட்பும் முறிந்து போவதற்கான காரணங்களை விளக்கியுள்ளார்.

அவரது உரையின் ஒரு பகுதி: "தேர்தலின் போது பெரியார் அவர்களிடம் இவர்கள் (கம்யூனிஸ்டுகள்) கேட்டுக் கொண்டது என்னவென்றால், மணலி கந்தசாமி, ஜீவானந்தம், அனந்த நம்பியார், பி.ராமமூர்த்தி உள்ளிட்ட 4,5 கம்யூனிஸ்ட்களை ஆதரித்து வெற்றிபெறச் செய்தால் போதுமென்றும், மற்ற இடங்களில் பெரியார் அவர்கள் ஆதரிக்கும் தோழர்களைத் தாங்கள் ஆதரிப்பதாகவும் உறுதி கூறினார்கள்.

ஆனால் பிறகு நடந்து கொண்டதென்ன? உங்களுக்குத் தெரியும், கம்யூனிஸ்ட் தோழர் அனந்தன் நம்பியார் பார்லிமெண்ட்க்கு நின்ற அதே தொகுதியில், ஒதுக்கப்பட்ட தொகுதிக்கு (பட்டியலினத்துக்கு) எங்கள் சங்க பொதுச்செயலாளர் தோழர் வீராசாமி நின்றார். அவரை ஆதரிப்பதாக வாக்குறுதி கொடுத்த கம்யூனிஸ்டுகள், தாங்கள், ஒதுக்கப்பட்ட அந்த தொகுதியில் நிறுத்தி வைத்த கம்யூனிஸ்ட் அபேட்சகரை (வேட்பாளரை) வாபஸ் வாங்குவதாக உறுதி கூறிக்கொண்டு, வாபஸ் வாங்குவதற்கு முடிவான தேதி முடிகிற வரையிலும் வாபஸ் வாங்காமலே இருந்து விட்டார்கள். ஏதோ அதற்கு சமாதானம் சொல்லி, தங்களால் ஒதுக்கப்பட்ட ஸ்தானத்துக்கு நிறுத்தப்பட்டத் தோழரை Withdrawal தேதி வரையிலும் வாபஸ் வாங்காமல், வாக்கெடுப்புக்கு சில நாட்களுக்கு முன்பு வாபஸ் வாங்குவதாக அறிவித்துவிட்டு, வாக்கெடுப்பு நேரத்திலும் தங்கள் ஆசாமியின் பெட்டியும் இருக்கும் படி செய்து கொண்டு, தங்கள் தோழர்களுக்கும் மற்றவர்களுக்கும் வழக்கமாக அவர்கள் செய்வார்களே தலைமறைவு வேலைத்திட்டம், அந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில், வீராசாமி அவர்களுக்கு ஓட்டு போடாமல், வாபஸ் வாங்கப்பட்ட தங்கள் ஆசாமியில் பெட்டியிலேயே ஓட்டுப் போடும்படி செய்து வந்தார்கள். அதன் காரணமாகவே வீராசாமி அவர்களுக்கு விழவேண்டிய ஓட்டுகள் குறைந்து காலியாக இருக்க வேண்டிய வாபஸ் வாங்கிக் கொள்ளப்பட்ட கம்யூனிஸ்ட் பெட்டியில் 80,000 ஓட்டுகளுக்கு மேல் விழுந்திருக்கின்றன. சுமார் 20,000 ஓட்டுகள் Invalid (செல்லாதவை) ஆயின. வீராசாமி அவர்கள் தோற்க வேண்டும் என்கிற நோக்கமல்லாமல் வேறு என்ன காரணம் சொல்ல முடியும்? இவ்வளவு துரோகத்திற்குப் பிறகும் எங்கள் பொதுச்செயலாளர் தோழர் வீராசாமி அவர்கள்10,000 ஓட்டுக்களே அதிகம் பெற்று காங்கிரஸ் மெம்பரிடம் வெற்றி பெற்றாரென்றால் அதற்கும் காரணம் திராவிடர் கழகம் செய்த தீவிர வேலையும், கழகத்திற்கு அங்கே இருந்த செல்வாக்கும் தான்" என்பதுவே அந்த உரையின் ஒரு பகுதியாகும்.

இதன்வழியாக 1952 இல் குடியரசான இந்திய நாடாளுமன்றத்துக்கு நடந்த முதல் தேர்தலில் திராவிடர் கழகம், தனது உறுப்பினரான தோழர் வ.வீராசாமி தனி வேட்பாளராக போட்டியிட்டபோது எவ்வளவு தீவிரமாக ஆதரித்தார்கள் என்பதும், வீராசாமி பெரியார் தொடங்கிய தென்பகுதி ரயில்வே மென் யூனியனின் பொதுச் செயலாளராக இருந்ததையும் நம்மால் அறிய முடிகிறது.

மேலும் அதற்கு முன்னதாகவே 24.3.1945 இல் 'தொண்டு' வீராசாமி அவர்களின் முயற்சியில் 'அம்பேத்கர் மாணவர் இல்லம்' தொடங்க உதவி செய்துள்ளது. மீனாம்பாள் சிவராஜ் தலைமையில் நடந்த அவ்விழாவில் சிறப்புரையாற்றியவர்கள் தி.பொ, வேதாச்சலமும் எஸ். ராமநாதனும் ஆவர். (குடிஅரசு 7.7.1945) தொடர்ந்து 17.3.1947 அன்று அம்பேத்கர் மாணவர் இல்லத்தின் இரண்டாவது ஆண்டு விழா பெரியார் தலைமையில் தி.பொ. வேதாச்சலம், பி.சிவபிச்சை, வ.வீராசாமி ஆகியோரின் சிறப்புரையோடு நடந்துள்ளது. (குடிஅரசு 22.3.1947) இதற்கிடையில் மற்றொரு செய்தியையும் பதிவு செய்தாக வேண்டும். கடந்த ஆகஸ்ட் 30ஆம் நாள் முடிவெய்திய ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதிமன்ற நீதிபதி சாமிதுரை அவர்கள் 'அம்பேத்கர் மாணவர் இல்லம்' இயங்கியதால் தான் அதில் தங்கி தனது கல்லூரிக் கல்வியைக் கற்க முடிந்தது" என்று குறிப்பிட்டதோடு பின்னர் அந்த இல்லம் திருச்சி பெரியார் மாளிகையின் ஒரு பகுதியில் வாடகை இன்றி நடந்து வந்த செய்தியையும் 2018இல் பெரியார் திடலில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் எடுத்துக் கூறியுள்ளார் என்பதையும் இவற்றோடு பொருத்திப் பார்க்க வேண்டிய செய்தியாகும்.

'தொண்டு' வீராசாமி அவர்கள் அம்பேத்கர் மாணவர் இல்லம் மட்டுமின்றி திருத்துறைப்பூண்டியில் 'பெரியார் ராமசாமி மாணவர் இல்லம்' என்ற பெயராலும் அடித்தட்டு மாணவர்களுக்கான விடுதி ஒன்றினையும் நடத்தியுள்ளார். 6.4.1953 நாளிட்ட 'விடுதலை' ஏட்டில் கீழ்கண்ட ஓர் அறிக்கையினை அவர் வெளியிட்டுள்ளார்.

"திருத்துறைப்பூண்டியில் சென்ற ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வரும் 'பெரியார் ராமசாமி மாணவர் இல்லத்திற்கு' சென்னை சர்க்கார் அங்கீகாரம் அளித்துள்ளார்கள் என்பதைப் பெரும் மகிழ்வுடன் அறிவித்துக் கொள்கிறேன்" என்று தொடங்கும் அந்த அறிக்கை "வ.வீராசாமி, ஸ்தாபகர் - செயலர்" என்ற பெயரால் வெளியிடப்பட்டுள்ளது.

தொடரும்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பிற்படுத்தப்பட்டோருக்கு எதிரி யார்?

# மோடிக்கு சில கேள்விகள்

**சட்டப்பேரவைத் தேர்தலுக்கு தயாராகி வரும் சத்தீஸ்காரின் பிலாஸ்பூரில் 30.09.2023 அன்று நடந்த பாரதிய ஜனதா கட்சி பேரணி ஒன்றில் நரேந்திர மோடி பிற்படுத்தப்பட்டவர்களின் எதிரி காங்கிரஸ் என்று பேசினார்.**

• இது அப்பட்டமான பொய். பிற்படுத்தப்பட்ட மக்களை வஞ்சிக்கக்கூடிய ஒரு ஆட்சியை பாஜக நடத்தி வருகிறது. மண்டல் பரிந்துரையை அமுலாக்கிய விபி.சிங் ஆட்சியைக் கவிழ்த்த பாஜக நீட் தேர்வைத் திணித்தது. காங்கிரஸ் கட்சி ஆட்சிக்காலத்தில் நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டாலும் கூட விரும்புகிற மாநிலங்கள் அதை பின்பற்றலாம் என்ற முறையை அதில் இருந்தது. ஆனால் குறுக்குவழியில் நீதிமன்றம் சென்று நீட் தேர்வை எல்லா மாநிலங்களிலும் அமுல்படுத்த வேண்டும் என்ற துரோகத்தை செய்தது பாரதிய ஜனதா கட்சி.

• நீட் தேர்வினால் அரசுப் பள்ளி மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்காக 7.5% உள் இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்ட போது அதை எதிர்த்து நீதிமன்றம் சென்றதும் இதே பாரதிய ஜனதா கட்சி ஆட்சி தான். புதுச்சேரியில் நாராயணசாமி தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இந்த ஒதுக்கீட்டை 10 சதவீதமாக உயர்த்தி அறிவித்தார். அதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த பாரதிய ஜனதா கட்சி ஆட்சி இந்த உள் இட ஒதுக்கீடு நீட் தேர்வின் நோக்கத்தையே சிதறடித்து விடும் என்று மனுத் தாக்கல் செய்தது.

• உயர்ஜாதி ஏழைகளுக்கான 10% இட ஒதுக்கீட்டை அவர்கள் கோரிக்கை வைக்காமலேயே கொண்டுவந்து 4 நாட்களிலேயே நிறைவேற்றியதும் இதே பாரதிய ஜனதா கட்சி ஆட்சி. இன்றைக்கும் உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் பாதியளவு இடங்களை கூட ஆசிரியர் நியமனங்களில், மாணவர் சேர்க்கைகளில் நிரப்பப்படாமல் இருப்பதற்கு காரணமாக இருப்பதும் இதே பாரதிய ஜனதா கட்சி ஆட்சி தான்.

• இப்போது விஸ்வகர்மா என்ற திட்டத்தை கொண்டு வந்து மீண்டும் விளிம்புநிலை மக்களை ஜாதித் தொழிலுக்கு இழுத்துச் செல்லும் ‘குலத் தொழிலை’ அமுல்படுத்தியதும் இதே பாரதிய ஜனதா கட்சி ஆட்சி தான்.

• அகில இந்திய மருத்துவக் கோட்டாவில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடே வழங்க முடியாது என்று சொன்னதும், உச்சநீதிமன்றத்தில் வாதாடியதும் இதே ஒன்றிய பாஜக அரசுதான். அதை எதிர்த்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நீதிமன்றத்தில் எதிர் வழக்காடி இந்தியா முழுவதும் பிற்படுத்தப்பட்டோருக்கான உரிமையை பெற்றுத் தந்தார்.

## காங்கிரஸ் கட்சியில் என்ன நிலை?

• காங்கிரஸ் கட்சி ஒரு காலத்தில் இடஒதுக்கீட்டை எதிர்த்தது என்பது வரலாறு. ராஜீவ் காந்தி கூட மண்டல் குழுவின் பரிந்துரையை எதிர்த்துதான் பேசினார். ஆனால், சோனியா காந்தி அதிகாரத்திற்கு வந்ததற்குப் பிறகு காங்கிரஸ் கட்சியில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது. கட்சி பதவிகளில் 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையினருக்கு வழங்க வேண்டும் என்ற முடிவை அவர் எடுத்தார்.

• மண்டல் கமிஷன் அரசு வேலைவாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்க வழி செய்தது என்று சொன்னால், காங்கிரஸ் ஆட்சி காலத்தில் தான் பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் 27 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. அதனை கொண்டு வருவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் அர்ஜுன் சிங்.

• இன்றும் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கூறும் கட்சிதான் காங்கிரஸ்.

• எதிர்க்கட்சியாக இருக்கும்போது மல்லிகார்ஜுன கார்கே என்ற தாழ்த்தப்பட்டவரை மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக்கியது. இன்று காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருப்பதும் கூட அதே கார்கே தான் என்பதை மறந்துவிடக் கூடாது.

• இடஒதுக்கீடு 50 சதவிகிதத்தை தாண்டக் கூடாது என உச்ச நீதிமன்றம் விதித்துள்ள வரம்பை மாற்றியமைக்க வேண்டும் தீர்மானம் போட்டுள்ளதும் காங்கிரஸ் கட்சிதான். பாஜக என்பது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிரியான கட்சி. காங்கிரஸ் சமூகநீதிக்கு ஆதரவான ஒரு கட்சி என்பதை மக்கள் மன்றத்திற்கு நாம் எடுத்துக்கூற வேண்டும்.

1ஆம் பக்க தொடர்ச்சி

# பிராமணர்கள் இட ஒதுக்கீடு கேட்கக் கூடாது

புதல்வன் நாயக்கர் எனும் சிறுவனைத் தன்னோடு அழைத்துச் சென்றார். செல்வன் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். அவரது புதல்வனை தன்னோடு சென்னைக்கு அழைத்து வந்தவர் அவனையும், தான் தங்கியிருந்த ஜி.ஏ.நடேசன் வீட்டிற்கு அழைத்துப் போய்விட்டார். நடேசனின் தாயாரோ மிகவும் வைதீகமானவர், ஆனால் அவரின் மனதையும் மாற்றியது நோய்வாய்ப்பட்ட அந்தச் சிறுவன் நாயக்கருக்கு காந்திஜி செய்த பணிவிடை.

சென்னையில் இருந்து திரும்பி சென்றதும் காந்திஜி செய்த முதல் வேலை அகமதாபாத்தின் புறநகர் பகுதியில் ஓர் ஆசிரமம் நிறுவியதாகும். அப்போது அங்கே இடம்பெற்றவர்கள் 25 பேர், அதில் 13 பேர் தமிழர்கள். ஆசிரமத்தில் பின்பற்ற வேண்டிய 11 விரதங்களில் ஒன்று தீண்டாமை ஒழிப்பும் இருந்தது.

1920ல் காந்திஜி மீண்டும் தமிழகத்திற்கு வந்த போது இங்கே பிராமணர் – பிராமணரல்லாதார் சூடு பிடித்திருந்தது. ஏற்கனவே நீதிக்கட்சி உருவாகியிருந்தது. தேசியவாதிகள் மத்தியில் இது பற்றிய விவாதம் நடந்து வந்தது. இயல்பாகவே இது குறித்த காந்திஜியின் கருத்தை அறிந்திடப் பலரும் ஆர்வமாக இருந்தனர். சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் காந்திஜி இவ்வாறு பேசினார்.

”பிராமணர் – பிராமணரல்லாதார் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பிராமணர்கள் சரணாகதி அடைந்துவிட வேண்டும். இதுதான் அவர்களுடைய கடமை. பிராமணரல்லாதார் எத்தனை இடங்களை கேட்கிறார்களோ அத்தனை இடங்களையும் அளித்து விட வேண்டும், என்னுடைய அதிகாரத்தில் அது இருந்தால் அதற்கு மேலும் சில இடங்களை அளிப்பேன். **பிராமணர்கள் மீது கொண்டுள்ள அவநம்பிக்கையால் தான் பிராமணரல்லாதார் இவ்வாறு இடங்களைக் கேட்கிறார்கள். பிராமணர்கள் நீண்ட காலம் மிகச்சிறப்பாக தொண்டாற்றியிருக்கிறார்கள். ஆனாலும் தங்களை உயர்வாகக் கருதும் தற்பெருமையின் காரணமாக தங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே அவர்கள் கற்பிக்கும் வேறுபாடு கொடூரமானது.** நாம் எந்த வேறுபாட்டை அதாவது ஐரோப்பியர்கள் தங்களுக்கும், கருப்பர்களுக்கும் இடையே பாராட்டும் வேறுபாட்டை எதிர்த்து போராடுகிறோமோ அந்த வேறுபாட்டின் அளவிற்கு இதுவும் கொடூரமானது”

ஏற்கனவே தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வந்தவர்கள் இந்த தலைமுறையில் விட்டுக்கொடுக்க வேண்டும். அதன் மூலம் பிராமணரல்லாதாரின் நம்பிக்கையைப் பெற வேண்டும் என்பதே காந்திஜியின் அடிப்படைக் கருத்தோட்டமாக இருந்தது. அதே நேரத்தில் இதனை அவர்களின் மனசாட்சிக்கு விட்டாரே தவிர, கட்டாயப்படுத்தவில்லை. இதில் இருந்து அவர் கடைசி வரை மாறவேயில்லை.

அவர் மறைவதற்கு சில மாதங்களுக்கு முன்பு தமிழகத்தில் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. அதில் இங்கு சிறுபான்மையினராக இருக்கும் பிராமணருக்கு அரசுப் பதவிகளிலோ, கல்லூரிகளிலோ உரிய இடங்கள் கிடைப்பதில்லையென்றும், இதற்கு காரணம் பிராமணர் எதிர்ப்பு இயக்கமே என்றும் கூறப்பட்டிருந்தது. இதனை டில்லியில் தனது மாலைப் பிரார்த்தனை சொற்பொழிவில் குறிப்பிட்டு அதுப்பற்றி தனது கருத்தையும் தெரிவித்தார்.

“நாம் செய்யும் கடமைகளில் இருந்துதான் உரிமைகள் கிடைக்கின்றன என்று நான் கூறி வருவதை மட்டும் அவர்கள் நினைவுப்படுத்திக்கொண்டால் அரசாங்கக் கல்லூரிகளில் சேர்த்துதான் ஆகவேண்டும் என்ற உரிமை எதுவும் யாருக்கும் கிடையாதென்பதை அவர்கள் உடனடியாக உணருவார்கள். யாராவது ஒரு பையன் அல்லது ஒரு பெண்ணுக்கு அத்தகைய உரிமை உண்டு என்றால், யாருடைய உரிமை இதுவரை கொடுமையான முறையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறதோ அவன் அல்லது அவளுக்குத்தான் அந்த உரிமை, **ஒரு பிராமணனின் கடமை ஆண்டவனை அடைவதும் மற்றவர்களை அடைய உதவுவதும் தான். அந்தக் கடமையைச் செய்வதில் அவனுக்கு கிடைக்க வேண்டிய உரிமை, அவன் எந்தச் சமுதாயத்திற்கு அந்த சேவையைச் செய்கிறானோ அந்தச் சமுதாயம் அவன் கண்ணியமாக வாழக்கூடியவாறு அவனுக்கு உணவும், உடையும் அளிக்க வேண்டும் என்பது தான்”**

**ஆதாரம் : [அருணன் எழுதிய தமிழகத்தில் சமூக சீர்திருத்தம் – இரு நூற்றாண்டு வரலாறு எனும் நூலில் இருந்து]**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : October 06, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran